திரு. எம். தேவராசன் : இந்த சைக்கிள் ரிக்ஷாக்களை எளிதாக ஓட்டுவதற்கு ஏதாவது "ஸம் மெக்கானிக்கல் டிவைஸ்" செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படிச் செய்ய முயற்சி செய்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

திரு. கே. என். குமாரசாமி : பாரம் வைத்து வண்டி இழுப்பது—மாட்டுக்குப் பதிலாக மனிதன் இழுத்துக்கொண்டிருக்கிறான்—என்பதற்குப் பதிலாக வேறு ஒரு திட்டத்தைப் புகுத்த அரசினிடம் ஏதாவது உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நம்மீது எவ்வளவோ பாரம் ஏற்றப்பட்டிருக்கிறது, படிப்படியாகத்தான் இவைகளுக்கெல்லாம் நாம் தீர்வு காணவேண்டும்.

திரு. நா. வீராசாமி : மனிதனை மனிதன் இழுக்கும் இந்தக் கொடுமையிலிருந்து—நம் முதல் அமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அறிவிக்கப்பட்ட இத்திட்டத்திற்காக மொத்தம் எவ்வளவு செலவு செய்ய நம் அரசு முடிவு செய்திருக்கிறது ? எவ்வளவு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்க இருக்கிறோம் ? அதில் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு என்ன பங்கு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதல் அமைச்சர் அவர்கள் நிதிக்கு ரூ. 25,82,340–79 காசு சேர்ந்தது. கைரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில் நல்லவேளையாக வட ஆர்க்காடு மாவட்டம் அந்த நிலைமையில் இல்லை. தமிழகத்திலே சென்னை, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டம் இந்த மூன்று பகுதிகளில்தான் கைரிக்ஷாக்கள் இழுத்துத்தான் பிழைக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து கொண்டிருந்தார்கள். ஆகவே, வட ஆர்க்காடு மாவட்டம் தப்பித்துக் கொண்டிருக்கிறது என்பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியடையலாம். நான் ஏற்கனவே சொன்னதுபோல் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கியாகிவிட்டன. அதுபோக இன்னும் 13 லட்சம் ரூபாய் கையில் மீதி இருக்கிறது. அதைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாளையொட்டி ஆயிரம் நாள் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையின் 1,500 ஏழை எளிய மக்களுக்கு, வாழ வழியற்ற மக்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவது என்றும் அவர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தந்து வருவார்களேயானால் ஆயிரம் நாட்களில் அந்த சைக்கிள் ரிக்ஷா அவர்களுக்கு உரிமையுடையதாக ஆகிவிடும் என்றும் அந்த வகையில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு விரைவில் வெளியிடப்பட இருக்கிறது.

மணிமுத்தார்—அம்பாசமுத்திரம் பேருந்துப்பணி.

* 489 வினா—திரு.ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1974 மார்ச் 18]

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, மணிமுத்தார் நகரியத்திற்கும், அம்பாசமுத்திரத்திற்கும் இடையே தாம்பரபரணி நதியின் குறுக்கேயுள்ள புதிய பாலத்தின் வழியாக பஸ் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) and (இ): திருநெல்வேலி பாண்டியன் சாலை போக்குவரத்துக் கழகம் 14—11—1973 முதல் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து திருநெல்வேலி சந்திப்புவரை, அம்பாசமுத்திரம், மணிமுத்தார் ஆகிய இடங்களின் வழியாக பேருந்து ஒன்றை நடத்தி வருகிறது.

ஊத்துக்கோட்டை—அம்பத்தூர் பேருந்துப்பணி.

*490 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஊத்துக்கோட்டைக்கும், அம்பத்தூருக்கும் இடையே வெங்கல் வழியே பேருந்துவிடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கும் ஊத்துக்கோட்டைக்கும் இடையே புதிய வழித்தடம் ஒன்றை விடும் செயற்குறிப்பு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இவ்வழித்தடம் விடுவதற்கான போக்குவரத்துத் தகுதிகளை ஆராய்ந்து போதிய ஊர்திகள் கிடைக்கப்பெற்றபின் இப்புதிய வழித்தடம் தொடங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, 10,000க்கும் மேற்பட்ட மக்கள் அந்த ஊத்துக்கோட்டை கிராமத்திலிருந்து தொழிற்பேட்டை இருக்கும் அம்பத்தூருக்கு வருவதற்கு நேரடி பஸ் வசதி இல்லை, ஆகவே, விரைவாக, நடவடிக்கை எடுத்து ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் அந்தப் பேருந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கனவே, நான் குறிப்பிட்டதைப்போல் பஸ்ஸீம் கிடைத்து, போக வர போக்குவரத்தும் போதுமான அளவுக்கு இருக்குமானுல் பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 10·00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.